# இயேசுவின் இரண்டாம் வருகை

Jesus' Second Advent

**பின்வருவனவற்றை நீங்கள் அறிவீர்களா?**

★ தாம் இருக்கிற இடத்திலே – பரலோகத்திலே – தம்முடைய சீஷர்களும் இருக்கும்படி, அவர் தாமே மறுபடியும் பூமிக்கு வந்து, அவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக் கொள்வதாக, இயேசு தம்முடைய சீஷர்களுக்கு வாக்களித்துள்ளார். – யோவா. 14 : 3; 17 : 24.

★ இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்னே மனுக்குலம் முழுவதையும் (உலகத்தை) மனந்திரும்பச் செய்ய வேண்டுமென்பது, தேவனுடைய ஏற்பாடாக இருந்ததில்லை; ஆனாலும் "தேவன் அவர்களினின்று (சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து – வெளி. 5 : 9, 10) தமது நாமத்துக்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்வதே" (அப். 15 : 14) அவருடைய ஏற்பாடாயிருந்தது; இவர்கள் உலகத்தை ஆசீர்வதிக்கவும், நியாயந்தீர்க்கவும், மனந்திரும்பச் செய்யவும் இயேசுவோடுகூட அவருடைய ஆயிர வருஷ ராஜ்யத்தில் பூமியிலே அரசாளுவார்கள். (அப். 17 : 31; வெளி. 3 : 21; 20 : 4, 6; மத். 19 : 28; 1 கொரி. 6 : 2).

★ இயேசு தமது இரண்டாம் வருகையில் தம்முடைய மகா வல்லமையைக் கொண்டு அரசாளத் தொடங்குகிறபொழுது, ஜாதிகள் மனந்திரும்பி இருப்பதற்கு பதிலாக கோபங்கொண்டிருக்கிறார்கள் – "மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் (உண்மையான சுவிசேஷத்தைக்) காண்பாரோ?" (லூக். 18 ; 8; 1 தீமோ. 4 : 1; 2 தீமோ. 3 : 1–8, 13; 2 பேது. 3 : 3, 4; சங். 2; வெளி. 2 : 26, 27; 11 : 17–19; 19 : 11–21.)

★ இயேசு தமது முதலாம் வருகையில் ஆதாமுக்காகவும் அவனது சந்ததிக்காகவும் தமது பூரண மானிட ஜீவனை ஒரு மீட்கும் பொருளாக (ஒரு பிரதிக்கிரயமாகச்) சமர்ப்பித்து (மத். 20 : 28; மாற். 10 : 45; ரோம. 5 : 12–21; 1 தீமோ. 2 : 5, 6; ஓசி. 13 : 14), தெய்வீக இனத்துக்குரிய அழியாமையுள்ள ஜீவனை அடைந்து கொள்ள வழிநடத்தும் ஒரு புதிதும் ஜீவனுமான வழியைச் சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுக்கப்படும் சபைக்கென்று திறந்து வைத்தார். (யோவா. 14 : 1–6; 2 தீமோ. 1 ; 10; எபி. 3 : 1; 10 : 19, 20; 2 பேது. 1 : 4).

★ ஆயிர வருஷ காலங்கொண்ட தமது இரண்டாம் வருகையில் (இரண்டாந்தரம் வந்திருக்கையில்) இயேசு முதலாவது தமது மணவாட்டியும் (1 கொரி. 15 : 50–54; 1 தெச. 4 : 15–17; 2 தீமோ. 4 : 8) அவருடைய தோழிகளாகிய கன்னிகைகள் என்னும் திரள் கூட்டத்தாரும் (சங். 45 : 14, 15; வெளி. 7 : 9–17) அடங்கிய தெரிந்தெடுக்கப்பட்ட சபையையும், தெரிந்தெடுப்புக்குட்பட்ட மீதியானவர்களையும் (சங். 45 : 16; ஏசா. 32 : 1; லூக். 13 : 28) மேன்மைப்படுத்தி, அதற்குப்பின்பு, "உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் திரும்பக் கொடுக்கப்படுங் காலங்களில் (அப். 3 : 21;–ஆங்கில பைபிள் காண்க; நிறைவேறித் தீருங்காலங்கள் என்பது சரியான மொழிபெயர்ப்பு அல்ல) தெரிந்தெடுப்புக்குட்படாத மீதியான மனுக்குலம் முழுவதையும் [உபத்திரவ காலத்தின் அழிவுக்குத்தப்பி அப்பொழுது உயிரோடிருகிறவர்களையும் (செப். 3 : 8, 9; மத். 24 : 21, 22) மரித்தோரையும் (யோவா. 5 : 28, 29; தானி. 12 : 2)] ஆசீர்வதிக்கிறார். (அப். 3 : 19–24; அப். 15 : 16, 17; ஏசா. 35).

★ விருப்பமுள்ள யாவருக்கும் ஜீவ தண்ணீரை இலவசமாய்க் கொடுத்து, பூமியிலுள்ள சகல வம்சங்களையும் ஆசீர்வதிக்கும் வேலையில் சபையாகிய கிறிஸ்துவின் உடன் சுதந்தரர்கள் ஆபிரகாமின் சந்ததியின் ஒரு பாகஸ்தராயிருந்து, வரப்போகிற திரும்பக் கொடுக்கப்படும் காலங்களில் அவருக்கு உதவிபுரிவார்கள். (ரோம. 8 : 17; ஆதி. 12 : 3; 22 : 18; அப். 3 : 25; கலா. 3 : 8, 16, 29; வெளி. 22 : 17).

★ ஆதாமின் குலத்திலுள்ள எவருக்கும் தேவன் இரண்டாவதான ஓர் அவகாசத்தை அருளிச் செய்யாவிட்டாலும், நித்திய ஜீவனை அடைந்து கொள்வதற்காக நிறைவானதும் பூரணமானதுமான ஓர் அவகாசத்தை அவர் எல்லாருக்கும் கொடுக்கிறார். அந்த ஒரே அவகாசத்தை இந்த ஜீவியத்தில் பெற்றுக்கொள்ளாதவர்கள், இழந்து போனவைகள் திரும்பக் கொடுக்கப்படும் காலத்தில் (ஆயிர வருஷ அரசாட்சிக் காலத்தில்) பெற்றுக் கொள்வார்கள்; ஏனெனில் இயேசு ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்தார் (அனுபவித்தார்); மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி எல்லா ஜனத்துக்கும் உண்டு. (எபி. 2 : 9; லூக். 2 : 10, 30-32; 3 : 5; யோவா. 1 : 9, 29; 12 : 32; 1 தீமோ. 4 : 10; 1 யோவா. 2 : 2).

★ கிறிஸ்து தம்முடைய ஆயிர வருஷ அரசாட்சியில், “எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும் ஆளுகை செய்ய வேண்டும். பரிகரிக்கப்படும் (அழிக்கப்படும்) கடைசி சத்துரு மரணம்.” (ஆதாமினால் உண்டான மரணமடையும் தன்மை) (1 கொரி. 15 : 24-26; வெளி. 21 : 4).

★ உலகம் ஜீவனை அடையும்படி (யோவா. 6 : 51) இயேசு “மாம்சத்திலே கொலையுண்டார்”- மாம்சத்திலே மரணத்துக்குள்ளாக்கப்பட்டார்; என்றாலும் ஒரு மானிட ஜீவியாக உயிரோடெழுப்பப்படாமல், ஓர் ஆவி ஜீவியாக (1 பேது. 3 : 18, R.V; 1 கொரி. 15 : 45, 50; 2 கொரி. 3 : 17; 5 : 16 உயிரோடெழுப்பப்பட்டு, மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரானார் (1 கொரி. 15 : 20; கொலோ. 1 : 18); இது முதற்கொண்டு அவர் ஓர் ஆவி ஜீவியாக, சகல தேவ தூதர்களைப் பார்க்கிலும் மிக உயர்ந்தவராகவும் (எபே. 1 : 20-23; பிலி. 2 : 8-11); தேவனுடைய தற்சொரூப முடையவராகவும் (எபி. 1 : 3-5), மானிட கண்களால் பார்க்கப்படக்கூடாதவராகவும் (மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறவர்” -1 தீமோ. 6 : 16; யோவா. 1 : 19; 5 : 37), காற்றைப்போல் போகவும் வரவும் கூடியராகவும் (யோவா. 3 : 6, 8) இருக்கிறார்.

★ ஆவி ஜீவிகளை அவர்களுடைய இயல்பான நிலையில் மனுஷர் தங்களுடைய கண்களால் பார்க்க முடியாதவர்களாயிருந்தபோதிலும், மனுஷர் நடுவில் அவர்கள் செய்ய நேரிடும் ஊழியங்களுக்குத் தகுந்தபடி மானிட சரீரங்களை உருவாக்கிக் கொள்ளவும், அவைகளில் மனுஷருக்குத் தோன்றவும், பின்பு அவைகளைக் கலைத்து விடவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு ஆபிரகாம், கிதியோன் முதலியவர்களுக்கு ஆவி ஜீவிகளாகிய தேவ தூதர்கள் அளித்த காட்சிகள் திருஷ்டாந்தங்களாகும். (ஆதி. 18 : 2; நியாய. 6 : 12, 21.)

★ அதுபோலவே இயேசுவும் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு ஓர் ஆவிஜீவியாக இருந்ததினால், தம்முடைய சீஷர்களுக்குப் பலவிதமான மாம்சச் சரீரங்களில் அல்லது உருவங்களில் (மாற். 16 : 12) அந்தந்தச்சமயத்துக்கேற்றவாறு வஸ்திரங்களையும் உண்டுபண்ணிக் கொண்டு (அவர் மனுஷனாயிருக்கையில் அவருடையதாயிருந்த வஸ்திரங்களைப் போர்ச்சேவகர்கள் பங்கிட்டுக் கொண்டார்கள் மத். 27 : 35) தோன்றினார். (உம்.) ஒரு தோட்டக்காரனைப் போலவும் (யோவா. 20 : 11-18), ஒரு வழிப்போக்கனைப் போலவும் (எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போன சீஷர்களோடு அவர் அப்பம் பிட்கையிலேயே அவர்கள் அவரை இனமறிந்தார்கள்; உடனே அவர் மாம்ச சரீரத்தைக் கலைத்துவிட்டு மறைந்து விட்டார். (லூ. 24 : 13-35), கைகளிலும் கால்களிலும் ஆணிகளாலுண்டான தழும்புகளையுடையவரைப் போலவும் (யோவா. 20 : 25-29), மீன் வாங்க வந்தவரைப்

போலவும் (யோவா. 21 : 1-14), பற்பல சமயங்களில் பற்பல உருவங்களில் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு இயேசு தமது சீஷர்களுக்குக் காணப்பட்டார்.

★ யூதர்களுக்குப் பயந்ததினால் அவருடைய சீஷர்கள் கதவுகளைப் பூட்டிக்கொண்டு கூடியிருந்த அறைக்குள் ஓர் ஆவி ஜீவியாக மாத்திரமே இயேசு பிரவேசித்திருக்கக்கூடும். அப்படிப் பிரவேசித்த பின்பு அந்த இடத்திலேயே ஒரு மாம்ச சரீரத்தை உண்டு பண்ணிக்கொண்டு, ஆபிரகாமின் காலத்தில் அவர் செய்ததுபோல (ஆதி. 18 ; 8); சடபதார்த்தங்களினால் உண்டான ஆகாரத்தைப் புசித்து, தமது சரீரத்தைத் தொட்டுப் பார்க்கும்படி கேட்டு, அவர்களை நோக்கி, "நீங்கள் காண்கிறபடி எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல (அவர்களுக்குத் தரிசனமளிக்கத்தக்கதாக அந்த இடத்திலேயே - அறைக்குள்ளேயே - அவர் உருவாக்கிக் கொண்டவைகளைப் போன்றவைகள்) ஒரு ஆவிக்கு (ஓர் ஆவி ஜீவிக்கு - அவருடைய உயிர்த்தெழுதல் முதல் அவர் ஆகியிருக்கிற ஓர் ஆவி ஜீவிக்கு - 2 கொரி. 3 : 17) இராதே" என்று சொன்னார். பூட்டப்பட்ட அறையின் சுவர்கள் வழியாகவாவது, வாசல்கள் வழியாகவாவது, மாம்சம் எலும்புகள் வஸ்திரங்கள் முதலியவைகள் வந்திருக்க முடியாதென்பது பிரத்தியட்சமான விஷயம்; என்றாலும் ஓர் ஆவி ஜீவியால் அப்படிச் செய்ய முடியும் (யோவா. 3 : 8); ஏனெனில் அப்படிப்பட்ட தடங்கல்கள் ஆவி ஜீவிகளைக் கட்டுப்படுத்தாது. இவ்விதமாக இயேசு மெய்யாவே ஓர் ஆவி ஜீவியாக அறைக்குள் வந்திருந்தாரென்பதை அவர் உருவாக்கிக் கொண்ட சரீரத்தைக் கலைத்துவிடுமுன்னே நிரூபித்துக் காட்டினார். (யோவா. 20 : 19-23; லூக். 24 : 34-48).

★ அவர் சவுலுக்குத் தரிசனமானபொழுது ஒரு மாம்ச சரீரத்தை உருவாக்கி கொள்ளவில்லை. அவருடைய ஆவிக்குரிய சரீரத்தினின்று (பிலி. 3 : 21) உண்டான மகிமையுள்ள ஒளியானது சவுலின் கண்களைக் குருடாக்கிவிட்டது; அரை குறையான பார்வையை மீண்டும் பெறுவதற்கு ஓர் அற்புதம் தேவையாயிருந்தது. (அப். 9 : 1-18; 2 கொரி. 12 : 7; கலா. 4 : 13-15.)

★ இயேசுவின் இரண்டாம் வருகையாகிய அவர் வந்திருக்கும் காலத்தின் முதற் பருவம் (காலப்பகுதி) இரவில் திருடன் வருகிற விதத்தைப் போல இரகசியமானது (வெளி. 16 : 15; லூக். 21: 34-36; 2 பேது. 3 : 10); அக்காலத்தில் அவர் வந்திருப்பதை உலகம் அறியாது. (லூக். 17 : 26-30; மத். 24 : 37-39 -வந்திருத்தல் என அர்த்தங்கொண்ட பரூஷியா (Parousia) என்ற கிரேக்க பதம் மத். 24 : 37, 39-ல் வருங்காலத்திலும் என தப்பிதமாய் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. E.R.V. காண்க); ஆனால் அக்காலத்திலுள்ள தேவனுடைய உண்மையான ஜனங்களோ, வேதக் காலக்கணக்கு, தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள், காலங்களின் அடையாளங்கள் முதலியவைகளின் மூலமாய் இயேசு வந்திருப்பதை அறிந்து கொள்வார்கள் (1 தெச. 5 : 1-5).

★ இவ்விதமாக, "அவர் எப்படி - எந்தவிதமாக - வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே - அவ்விதமாகவே - (அமைதியாகவும், எந்த ஒரு பெரிய ஆடம்பரமில்லாமலும், உலகம் அறியாத பிரகாரமாகவும், ஆனால் அவருடைய உண்மையான சீஷர்கள் மாத்திரம் அறிந்து கொள்ளத்தக்கதாகவும்) வருவார்" (அப். 1 : 11). அவர் அதே சரீரத்தில் அல்லது உருவத்தில் வருவாரென்று இவ்வாக்கியம் தெரிவிக்காமல், அந்த விதமாகவே வருவாரென்று தெரிவிக்கிறதென்பதைக் கவனிக்கவும்.

★ இயேசு சிலுவையிலறையப்படுவதற்கு முன்னே, "இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று சொன்னார். (யோவா. 14 : 19); ஆகையால் அவர்கள் இனிமேல் தங்களுடைய இயல்பான மாம்சக் கண்களினால் அவரை ஒருபோதும் பார்க்க மாட்டார்கள்; என்றாலும் அவர் இரண்டாந்தரம் வந்திருக்கும் காலத்தின் இரண்டாம் பகுதிக் காலத்தில், அதாவது, அவருடைய எபிபனியா அல்லது அப்போகாலுப்சிஸ் என்று சொல்லப்படும் அவரது வெளிப்படுங் காலத்தில் "அவர் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல்

(மகா பெரிய உபத்திரவத்தின் கொடிய துன்பத்தில்) வருகிறதை" தங்களுடைய மனக் கண்களினால் காண்பார்கள் – அறிந்துகொள்வார்கள். (லூக். 21 : 27; மத். 24 : 21, 30).

★ இயேசு இரண்டாந்தரம் வந்திருக்கையில் அவர் உலகத்துக்கு வெளிப்படுத்தப்படுகிறபொழுது, அதின் பயனாக, "கண்கள் யாவும் அவரைக் காணும்"; அவர் வந்திருப்பதையும், சாத்தானுடைய ராஜ்யத்தை அழிப்பதிலும் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதிலும் விளங்கும் அவருடைய வல்லமையையும் அதிகாரத்தையும் மனுக்குலம் முழுவதும் தங்களுடைய மனக் கண்களினால் பகுத்தறிந்து கொள்வார்கள். (2 தெச. 1 : 7, 8; வெளி. 1 : 7).

★ அறிவுப் பெருக்கத்தையும் பிரயாணப் பெருக்கத்தையும் முன் ஒருபோதும் சம்பவித்திராத உபத்திரவத்தின் காலத்தையுமுடைய முடிவு காலத்தில் நாம் இப்பொழுது இருக்கிறோமென்று வேதத் தீர்க்கதரிசனமும் வேத காலக்கணக்கும் காலங்களின் அடையாளங்களும் தெரிவிக்கின்றன. (தானி. 12 : 1, 4, 9, 10; லூக். 21 : 25–27; யாக். 5 : 1–8).

★ தானியேலின் பெரிய சிலையின் கால்விரல்களினால் குறித்துக் காட்டப்படுகிற தற்காலப் பூலோக அரசாங்கங்களாகிய "இந்த இராஜாக்களின் நாட்களிலே" (அவர்கள் அரசாண்டு கொண்டிருக்கும் காலத்திலேயே) தேவன் சாத்தானுடைய ராஜ்யத்தை அழித்து பூமியிலே தமது நீதியுள்ள ஆளுகையை ஸ்தாபித்துக் கொண்டிருக்கிறார். (தானி. 2 : 35, 44; சங். 46; செப். 1 : 16–18; 3 : 8, 9; 2 பேது. 3 : 7–13).

★ "இராஜ்யத்தினுடைய சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் (அவர்களெல்லாரையும் மனந்திரும்பச் செய்யாதே போனாலும்) பிரசங்கிக்கப்பட்டிருக்கிறது"; ஆகையால் யுகத்தின் முடிவு வந்துவிட்டது (நாம் யுகத்தின் முடிவில் இருக்கிறோம். – மத். 24 : 14; 13 : 39).

★ இயேசுவின் இரண்டாம் வருகையையும் அவருடைய சமாதான அரசாட்சியையும் சுட்டிக் காட்டுகிற அநேக அடையாளங்களில் ஒன்று இஸ்ரவேலர் (யூதர்கள்) தங்கள் சுய தேசத்துக்குத் திரும்பி வருவதேயாகும். இது அவர்கள் தங்கள் மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கும், அதின் பயனாக அவர்களுக்கும் புறஜாதிகளுக்கும் வரும் மாபெரும் ஆசீர்வாதங்களை அடைந்து கொள்வதற்குமுரிய ஓர் ஆயத்த நடவடிக்கையேயாகும். – (சகரி. 8; 12 : 9, 10; 14 : 16–21; மத். 23 : 39; ஏசா. 2 : 2–4; எரே. 23 : 5–8; 24 : 6, 7; 30 : 7–11, 18–24; 31 : 8–12, 27–34; ஆமோ. 9 : 11, 15; ரோம. 11 : 25–29.)

*Courtesy by :* LAYMEN'S HOME MISSIONARY MOVEMENT
1156, St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A.

***For English & Tamil Magazines, Books, Tracts, Booklets Contact :***

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617

Thoothukudi District, Tamil Nadu, India.

E-mail ID : vincent@biblestandardindia.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**